DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register **CC 588 /2021**

**DCB** காவல் நிலையம் நாகப்பட்டினம்

Sessions
Deposition of witness for : PW -1 ( LW-1 )

| | |
|---|---|
| Name : ஆனந்தராஜ் | Village /Taluk : |
| Fathers Name | Caste /Religion : |
| or Husband Name: | Age /Calling : |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 21.06.2022

முதல் விசாரணை

நான் தற்போது மஞ்சக்கொல்லை புத்தூர் சிவன் தெற்கு தெருவில் வசித்துவருகிறேன். இதற்கு முன்னதாக வெளிநாட்டில் டெய்லராக வேலை பார்த்தேன். தற்போது எனது வீட்டில் டெய்லராக வேலை பார்த்துவருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் மூவரையும் தெரியும். எனக்கு அபிநயா என்கிற பெண் உள்ள காரணத்தினால் வெளிநாட்டில் டெய்லராக வேலை பார்த்து சிறுக, சிறுக பணத்தினை சேமித்து வைத்திருந்தேன். மேற்படி பணத்தினை ஏதேனும் நிறுவனத்தில் முதலீடு செய்து நான்கு ஆண்டுகளுக்கு பிறகு எனது மகளின் திருமணத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்று இருந்தேன்., அப்போது 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தினசரி செய்தி தாளில் உள்ளே துண்டு விளம்பர சீட்டு (பிட்நோட்டீஸ்) ஒன்று கண்டேன். மேற்படி விளம்பர சீட்டின் நாகப்பட்டினம் நடுவர் கீழவீதி நான்கு கால் மண்டபம் அருகே அமைந்துள்ள AF Tower ல் இயங்கி வரும் Prompt Multi state Co – Operative House Building Society Ltd., என்ற தனியார் நிறுவனத்தில் முதலீடு செய்தால் ஆண்டிற்கு 14 சதவீத வட்டி தருவதாகவும், 5 ஆண்டுகளில் முதலீடு செய்த பணத்திற்கு இரட்டிப்பு தொகை திருப்பி தருவதாகவும் விளம்பரம் கண்டிருந்தது. மேற்படி விளம்பர துண்டு சீட்டை பார்த்தபிறகு நானும் எனது மனைவியும் மேற்படி முகவரியில் உள்ள நிறுவனத்திற்கு சென்று பார்த்தேன்.

அச்சமயம் இவ்வழக்கின் எதிரிகளாகிய சேதுராமன், பாலமுருகன் மற்றும் உஷா ஆகியோர் மேற்படி முகவரியில் இருந்த அலுவலகத்தில் இருந்தார்கள். மேற்படி எதிரிகளின் உறவினரான ஜெயசுதா என்பவரும் மேற்படி அலுவலகத்தில் இருந்தார். அதனைதொடர்ந்து இவ்வழக்கின் எதிரிகள் மூவரும், மேற்படி

நிறுவனத்திற்கு நாங்கள்தான் உரிமையாளர்கள் என்றும்எங்கள் நிறுவனத்தில் முதலீடு செய்தால் அதிக வட்டித்தொகை கிடைக்கும் என்றும் உங்கள் பணத்திற்கு நாங்கள் பொறுப்பு என்றும் குறிப்பிட்டு நம்பிக்கை தந்தார்கள்.

அதனைபின்னிட்டு கடந்த மே 2016 மாத இறுதி வாரத்தில் வள்ளலார் கோயிலுக்கு நான் சென்றிருந்தபோது எதிரிகள் மூவரும் மேற்படி கோயிலுக்கு வந்திருந்தார்கள். அப்போது எதிரிகள் மூவரும் எதன் காரணமாக நிறுவனத்தில் முதலீடு செய்யவில்லை என விசாரித்து மேற்படி அலுவலகத்தின் தலைமை அலுவலகத்தினை கோயம்புத்தூரில் நடத்தி வருவதாகவும், வடக்கு பொய்கைநல்லூரில் 40 ஆண்டுகளாக பூர்வீக வீட்டினில் குடியிருந்து வருவதாகவும், அதுமட்டுமல்லாது தனியே ஒரு கம்பூயூட்டர் சென்டரினை நடத்தி வருவதாகவும்., அவைகளை தவிர்த்து அசையா சொத்துகள் சொந்தமாக உள்ள காரணத்தினால் எங்களை நம்பி மேற்படி நிறுவனத்தில் முதலீடு செய்யுங்கள் என எதிரிகள் நம்பிக்கை வாக்குறுதிகளை கூறினார்கள்.

மேற்படி எதிரிகள் மூவரும் அளித்திருந்த வாக்குறுதியின் பேரில் கடந்த சூன் 2016 முதல் டிசம்பர் 2016 மாதவரையும் நான் சேமித்து வைத்திருந்த பணத்தினை பலத்தவணைகளாக எனது பெயரில் ரூ,6,25,000/ மற்றும் எனது மனைவி பெயரில் ரூ,6,25,000/ ம் ஆக மொத்தம் ரூ12,50,000/ ம் நிரந்தர வைப்பீடாக மேற்படி நிறுவனத்தில் செலுத்தியிருந்தேன். மேற்படி நிரந்தர வைப்பீடானது 5 ஆண்டுகளுக்கு உரியதாகும்.

நிரந்தர வைப்பீடு தொகையிலிருந்து கிடைக்கக்கூடிய வட்டித்தொகைகளை Recurring Deposit மாதந்தோறும் வரவு வைத்துக்கொள்ள எதிரிகள் கேட்டுக்கொண்டதன்பேரில் எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும் கடந்த 2016 டிசம்பர் மாத வாக்கில் Recurring Deposit கணக்கினை துவக்கியிருந்தேன். மேற்படி Recurring Deposit கணக்கில் மாதந்தோறும் தலா 5,000/ வீதம் குறிப்பிட்ட காலம் வரையில் பாஸ் புத்தகத்தில் வரவு வைத்து கொடுத்தார்கள்.அதனைபின்னிட்டு கணக்கு வழக்குகள் கனிணி மயமாக்கப்பட்டுவிட்டதால் அலுவலகத்திற்கு வந்து செல்ல தேவையில்லை என்றும் தானாகவே கணக்கில் பணம் சேர்ந்துவிடும் என எதிரிகள் கூறினார்கள்.

நிரந்தர வைப்பீடு தொகை செலுத்தும் தினங்களில் அதற்கென நிரந்தர வைப்பீட்டு பத்திரத்தினை அப்போதே கொடுத்துவிடுவார்கள். அதேபோல் Recurring Deposit கணக்கினை துவங்கியபோது என்பெயரிலும், எனது மனைவி பெயரிலும் பாஸ்புத்தகம், ID Card. Share Certificate. SB Pass BooK ஆகியவைகளை எதிரிகள் கொடுத்தார்கள்.

கடந்த ஜனவரி 2021 மாதத்தில் எனது மகளுக்கு திருமணம் செய்துகொள்ளலாம் என குறிப்பிட்டு வரன் தேடி வந்த காரணத்தினால் நானும், எனது மனைவியும் கடந்த செப்டம்பர் 2020 மாதவாக்கில் மேற்படி நாலுகால்

மண்டபம் அருகே அமைந்திருந்த எதிரிகளின் நிறுவனத்திற்கு சென்று பார்த்தபோது, எதிரிகள் மூவரும் இருந்த காரணத்தினால் எனது மகளுக்கு திருமணம் நடைபெறவுள்ள காரணத்தை கூறி நான் முதலீடு செய்த தொகையினை திரும்ப கேட்டேன். அப்போது எதிரிகள் வைப்பீடு காலத்திற்கு முன்னதாகவே பணத்தினை திரும்ப கோருகின்ற காரணத்தினால் வட்டித்தொகைகள் கிடையாது என்றும் அசல் மட்டுமே திரும்ப தரப்படும் என்றும் இரண்டு நாட்கள் கழித்து முதலீடு செய்த அசல் தொகையை வந்து பெற்றுக்கொள்ளுமாறு எதிரிகள் மூவரும் தெரிவித்தார்கள்.

அவ்வாறு இருமுறை இரு நாட்கள் இடைவெளியில் நான் சென்று பணத்தினை திரும்ப கேட்டேன். மூன்றாவது முறை இருநாட்கள் இடைவெளியில் நான் சென்று பார்த்தபோது மேற்படி அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. மேற்படி விபரத்தை எனது வீட்டில் வந்து எனது குடும்பத்தாரிடம் தெரிவித்தேன். அப்போது எங்களுக்கு வழங்கப்பட்டிருந்து பான்ட் பத்திரத்தில் கண்டிருந்த தலைமை இடமான கோயமுத்தூருக்கு சென்று பார்த்தபோது அத்தகைய விலாசகத்தில் எதிரிகளுடைய தலைமை நிறுவனம் நடந்து வந்திருக்கவில்லை என்ற விபரத்தை தெரிந்துகொண்டேன். திரும்பவும் நாகப்பட்டினம் வந்து மேற்படி அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது தொடர்ந்து பூட்டப்பட்டிருந்த காரணத்தினால் அதிர்ச்சி அடைந்து எதிரிகளுடைய முகவரி அறிந்து, நான் என்னுடன் எனது மனைவி மற்றும் மகளை அழைத்துக்கெசாண்டு எதிரிகளிடம் பணத்தினை திருப்பி கேட்டேன். அப்போது எதிரிகள் மூவரும் பணத்தினை தயார் செய்துகொண்டிருப்பதாகவும் விரைவில் பணத்தினை திரும்ப கொடுத்துவிடுவதாக சொன்னார்கள். அதனை தொடர்ந்து பலமுறை எதிரிகளிடம் பணத்தினை கேட்டபோதும், ஒவவொரு முறையும் தருவதாக சொல்லி ஏமாற்றி வந்தார்கள், இறுதியாக ஒருநாள் எதிரிகள் மூவரும், கல்யாண வயதில் ஒரு பொண்ணு இருக்கு அதனால் ஒழுங்கு மரியாதையாக ஓடிவிடு இல்லையென்றால் குடும்பத்தோடு கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள்.

அதனைதொடர்ந்து என்ன செய்வது என்று அறியாமல் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் கடந்த 30.11.2021 தேதியன்று புகார் மனுவினை அளித்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் மனு அதசாஆ 1 ஆகும்.

1. கடந்த 09.06.2016 – 11.06.2016 – 02.07.2016 – 02.07.2016 – 07.07.2016 – 16.07.2016 – 01.08.2016 – 01.08.2016 – 17.00,2010 ஆகிய தேதியிட்ட வைப்பீட்டு செலான்கள் அசல் (09 எண்ணிக்கை) அதசாஆ 2 ஆகும்.

2, கடந்த 09.06.2016 – 11.07.2016 – 02.07.216 – 16.07.2016 – 16.07.2016 – 13.10.2016 – 17.10.2016 – 17.10.2016 – 02.07.2016 – 01.08.2016 – 02.11.2016 – 10.11.2016 ஆகிய தேதிகளிட்ட நிரந்தர வைப்பீடு Bond பத்திரங்கள் அசல் அதசாஆ 3 ஆகும்( 12 எண்ணிக்கைகள்)

3. எனது பெயருக்கு எதிரிகளின் நிறுவனத்தால் PR / 020/SC /16/0200 என்ற எண்ணுள்ள Share Certificate அசல்அதசாஆ 4 ஆகும்.

4. எதிரிகளின் நிறுவனத்தால் எனக்கு வழங்கப்பட்டிருந்த 201291 என்ற எண்ணுள்ள SB Passbook அசல் அதசாஆ 5 ஆகும்.

5. எதிரிகளின் நிறுவனத்தால் எனக்கு வழங்கப்பட்டிருந்த PR/020/RD/16/000072 என்ற எண்ணுள்ள Recurring Deposit Pass Book அசல் அதசாஆ 6 ஆகும்.

6 எதிரிகளின் நிறுவனத்தால் எனக்கு வழங்கப்பட்டிருந்த 201291 என்ற எண்ணுள்ள Member ID Card அசல் அதசாஆ 7 ஆகும்.

மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக போலிஸார் என்னை விசாரித்தபோது மேற்படி விபரங்களை தெரிவித்தேன்.

எதிரிகள் மூவரும் மனுவின்பேரில் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register **CC 558 /2021**

**DCB** காவல் நிலையம்
நாகப்பட்டினம்

Sessions
Deposition of witness for : PW -2 ( LW-2 )

Name : கலைமணி

Village /Taluk :

Fathers Name

Caste /Religion :

or Husband Name:

Age /Calling :

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 21.06.2022

முதல் விசாரணை

நான் தற்போது மஞ்சக்கொல்லை புத்தூர் சிவன் தெற்கு தெருவில் வசித்துவருகிறேன். அசா1 ஆனந்தராஜ் என்பவர் எனது கணவர் ஆவார், எனது கணவர் இதற்கு முன்னதாக வெளிநாட்டில் டெய்லராக வேலை பார்த்தார். தற்போது எனது கணவர் எங்களது வீட்டிலேயே டெய்லராக வேலை பார்த்துவருகிறார். இவ்வழக்கின் எதிரிகள் மூவரையும் தெரியும். எனக்கு அபிநயா என்கிற பெண் உள்ள காரணத்தினால் வெளிநாட்டில் எனது கணவர் டெய்லராக வேலை பார்த்து சிறுக, சிறுக பணத்தினை சேமித்து வைத்திருந்தார். மேற்படி பணத்தினை ஏதேனும் நிறுவனத்தில் முதலீடு செய்து நான்கு ஆண்டுகளுக்கு பிறகு எனது மகளின் திருமணத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்று நினைத்து இருந்தார்., அப்போது 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தினசரி செய்தி தாளில் உள்ளே துண்டு விளம்பர சீட்டு (பிட்நோட்டீஸ்) ஒன்று கண்டோம். மேற்படி விளம்பர சீட்டில் நாகப்பட்டினம் நடுவர் கீழவீதி நான்கு கால் மண்டபம் அருகே அமைந்துள்ள AF Tower ல் இயங்கி வரும் Prompt Multi state Co – Operative House Building Society Ltd., என்ற தனியார் நிறுவனத்தில் முதலீடு செய்தால் ஆண்டிற்கு 14 சதவீத வட்டி தருவதாகவும், 5 ஆண்டுகளில் முதலீடு செய்த பணத்திற்கு இரட்டிப்பு தொகை திருப்பி தருவதாகவும் விளம்பரம் கண்டிருந்தது. மேற்படி விளம்பர துண்டு சீட்டை பார்த்தபிறகு நானும் எனது கணவரும் மேற்படி முகவரியில் உள்ள நிறுவனத்திற்கு சென்று பார்த்தோம்.

அச்சமயம் இவ்வழக்கின் எதிரிகளாகிய சேதுராமன், பாலமுருகன் மற்றும் உஷா ஆகியோர் மேற்படி முகவரியில் இருந்த அலுவலகத்தில் இருந்தார்கள். மேற்படி எதிரிகளின் உறவினரான ஜெயசுதா என்பவரும் மேற்படி அலுவலகத்தில் இருந்தார். அதனைதொடர்ந்து இவ்வழக்கின் எதிரிகள் மூவரும், மேற்படி நிறுவனத்திற்கு நாங்கள்தான் உரிமையாளர்கள் என்றும்எங்கள் நிறுவனத்தில்

முதலீடு செய்தால் அதிக வட்டித்தொகை கிடைக்கும் என்றும் உங்கள் பணத்திற்கு நாங்கள் பொறுப்பு என்றும் குறிப்பிட்டு நம்பிக்கை தந்தார்கள்.

அதனைபின்னிட்டு கடந்த மே 2016 மாத இறுதி வாரத்தில் வள்ளலார் கோயிலுக்கு நானும் எனது கணவர் மற்றும் மகளும் சென்றிருந்தபோது எதிரிகள் மூவரும் மேற்படி கோயிலுக்கு வந்திருந்தார்கள். அப்போது எதிரிகள் மூவரும் எதன் காரணமாக நிறுவனத்தில் முதலீடு செய்யவில்லை என விசாரித்து மேற்படி அலுவலகத்தின் தலைமை அலுவலகத்தினை கோயம்புத்தூரில் நடத்தி வருவதாகவும், வடக்கு பொய்கைநல்லூரில் 40 ஆண்டுகளாக பூர்வீக வீட்டினில் குடியிருந்து வருவதாகவும், அதுமட்டுமல்லாது தனியே ஒரு கம்பூயூட்டர் சென்டரினை நடத்தி வருவதாகவும்., அவைகளை தவிர்த்து அசையா சொத்துகள் சொந்தமாக உள்ள காரணத்தினால் எங்களை நம்பி மேற்படி நிறுவனத்தில் முதலீடு செய்யுங்கள் என எதிரிகள் நம்பிக்கை வாக்குறுதிகளை கூறினார்கள்.

மேற்படி எதிரிகள் மூவரும் அளித்திருந்த வாக்குறுதியின் பேரில் கடந்த சூன் 2016 முதல் டிசம்பர் 2016 மாதவரையும் எனது கணவர் சேமித்து வைத்திருந்த பணத்தினை பலத்தவணைகளாக எனது பெயரில் ரூ,6,25,000/ மற்றும் எனது கணவர் பெயரில் ரூ,6,25,000/ ம் ஆக மொத்தம் ரூ12,50,000/ ம் நிரந்தர வைப்பீடாக மேற்படி நிறுவனத்தில் செலுத்தியிருந்தோம். மேற்படி நிரந்தர வைப்பீடானது 5 ஆண்டுகளுக்கு உரியதாகும்.

நிரந்தர வைப்பீடு தொகையிலிருந்து கிடைக்கக்கூடிய வட்டித்தொகைகளை Recurring Deposit மாதந்தோறும் வரவு வைத்துக்கொள்ள எதிரிகள் கேட்டுக்கொண்டதன்பேரில் எனது பெயரிலும், எனது கணவர் பெயரிலும் கடந்த 2016 டிசம்பர் மாத வாக்கில் Recurring Deposit கணக்கினை துவக்கியிருந்தோம். மேற்படி Recurring Deposit கணக்கில் மாதந்தோறும் தலா 5,000/ வீதம் குறிப்பிட்ட காலம் வரையில் பாஸ் புத்தகத்தில் வரவு வைத்து கொடுத்தார்கள்.அதனைபின்னிட்டு கணக்கு வழக்குகள் கனிணி மயமாக்கப்பட்டுவிட்டதால் அலுவலகத்திற்கு வந்து செல்ல தேவையில்லை என்றும் தானாகவே கணக்கில் பணம் சேர்ந்துவிடும் என எதிரிகள் கூறினார்கள்.

நிரந்தர வைப்பீடு தொகை செலுத்தும் தினங்களில் அதற்கென நிரந்தர வைப்பீட்டு பத்திரத்தினை அப்போதே கொடுத்துவிடுவார்கள். அதேபோல் Recurring Deposit கணக்கினை துவங்கியபோது என்பெயரிலும், எனது கணவர் பெயரிலும் பாஸ்புத்தகம், ID Card. Share Certificate. SB Pass BooK ஆகியவைகளை எதிரிகள் கொடுத்தார்கள்.

கடந்த ஜனவரி 2021 மாதத்தில் எனது மகளுக்கு திருமணம் செய்துகொள்ளலாம் என குறிப்பிட்டு வரன் தேடி வந்த காரணத்தினால் நானும், எனது கணவருடன் கடந்த செப்டம்பர் 2020 மாதவாக்கில் மேற்படி நாலுகால் மண்டபம் அருகே அமைந்திருந்த எதிரிகளின் நிறுவனத்திற்கு சென்று

பார்த்தபோது, எதிரிகள் மூவரும் இருந்த காரணத்தினால் எனது மகளுக்கு திருமணம் நடைபெறவுள்ள காரணத்தை கூறி நாங்கள் முதலீடு செய்த தொகையினை திரும்ப கேட்டோம். அப்போது எதிரிகள் வைப்பீடு காலத்திற்கு முன்னதாகவே பணத்தினை திரும்ப கோருகின்ற காரணத்தினால் வட்டித்தொகைகள் கிடையாது என்றும் அசல் மட்டுமே திரும்ப தரப்படும் என்றும் இரண்டு நாட்கள் கழித்து முதலீடு செய்த அசல் தொகையை வந்து பெற்றுக்கொள்ளுமாறு எதிரிகள் மூவரும் தெரிவித்தார்கள்.

அவ்வாறு இருமுறை இரு நாட்கள் இடைவெளியில் நானும் எனது கணவரும் சென்று பணத்தினை திரும்ப கேட்டோம். மூன்றாவது முறை இருநாட்கள் இடைவெளியில் நானும் எனது கணவரும் சென்று பார்த்தபோது மேற்படி அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. அதனைதொடரந்து எங்களுக்கு வழங்கப்பட்டிருந்து பான்ட் பத்திரத்தில் கண்டிருந்த தலைமை இடமான கோயமுத்தூருக்கு சென்று பார்த்தபோது அத்தகைய விலாசகத்தில் எதிரிகளுடைய தலைமை நிறுவனம் நடந்து வந்திருக்கவில்லை என்ற விபரத்தை எனது கணவர் தெரிந்துகொண்டார் . திரும்பவும் நாகப்பட்டினம் வந்து மேற்படி அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது தொடர்ந்து பூட்டப்பட்டிருந்த காரணத்தினால் அதிர்ச்சி அடைந்து எதிரிகளுடைய முகவரி அறிந்து, எனது கணவர், நான் மற்றும் எங்களது மகளை அழைத்துக்கெசாண்டு எதிரிகளிடம் பணத்தினை திருப்பி கேட்டோம். அப்போது எதிரிகள் மூவரும் பணத்தினை தயார் செய்துகொண்டிருப்பதாகவும் விரைவில் பணத்தினை திரும்ப கொடுத்துவிடுவதாக சொன்னார்கள். அதனை தொடர்ந்து பலமுறை எதிரிகளிடம் பணத்தினை கேட்டபோதும், ஓவவொரு முறையும் தருவதாக சொல்லி ஏமாற்றி வந்தார்கள், இறுதியாக ஒருநாள் எதிரிகள் மூவரும், கல்யாண வயதில் ஒரு பொண்ணு இருக்கு அதனால் ஒழுங்கு மரியாதையாக ஓடிவிடு இல்லையென்றால் குடும்பத்தோடு கொலை செய்துவிடுவதாக எங்களை மிரட்டினார்கள்.

அதனைதொடர்ந்து என்ன செய்வது என்று அறியாமல் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் கடந்த 30.11.2021 தேதியன்று எனது கணவர் புகார் மனுவினை அளித்திருந்தார்.

1. கடந்த 09.06.2016 – 11.06.2016 – 30.06.2016 – 30.06.2016 – 02.07.2016 – 29.07.2016 –29.07.2016 – 01.08.2016 ஆகிய தேதியிட்ட வைப்பீட்டு செலான்கள் அசல் (08 எண்ணிக்கை) அதசாஆ 8 ஆகும்.

2, கடந்த 09.06.2016 – 11.06.2016 – 02.07.2016 – 29.07.2016 – 29.07.2016 – 17.10.2016 – 02.11.2016 – 02.11.2016 – 02.07.2016 – 01.08.2016 – 21.11.2016 – 10.11.2016 – 01.12.2016 ஆகிய தேதிகளிட்ட நிரந்தர வைப்பீடு Bond பத்திரங்கள் அசல் அதசாஆ 9 ஆகும்( 13 எண்ணிக்கைகள்)

3. எனது பெயருக்கு எதிரிகளின் நிறுவனத்தால் PR / 020/SC /16/0201 என்ற எண்ணுள்ள Share Certificate அசல்அதசாஆ 10 ஆகும்.

4. எதிரிகளின் நிறுவனத்தால் எனக்கு வழங்கப்பட்டிருந்த 201292 என்ற எண்ணுள்ள SB Passbook அசல் அதசாஆ 11 ஆகும்.

5. எதிரிகளின் நிறுவனத்தால் எனக்கு வழங்கப்பட்டிருந்த PR/020/RD/16/000073 என்ற எண்ணுள்ள Recurring Deposit Pass Book அசல் அதசாஆ 12 ஆகும்.

6 எதிரிகளின் நிறுவனத்தால் எனக்கு வழங்கப்பட்டிருந்த 201292 என்ற எண்ணுள்ள Member ID Card அசல் அதசாஆ 13 ஆகும்.

மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக போலிஸார் என்னை விசாரித்தபோது மேற்படி விபரங்களை தெரிவித்தேன்.

எதிரிகள் மூவரும் மனுவின்பேரில் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.I, NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register **CC 558 /2021**

**DCB** காவல் நிலையம் நாகப்பட்டினம்

Sessions
Deposition of witness for : PW -3 ( LW-3 )

| | |
|---|---|
| Name : அபிநயா | Village /Taluk : |
| Fathers Name | Caste /Religion : |
| or Husband Name: | Age /Calling : |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 21.06.2022

முதல் விசாரணை

நான் தற்போது மஞ்சக்கொல்லை புத்தூர் சிவன் தெற்கு தெருவில் வசித்துவருகிறேன். அசா1 ஆனந்தராஜ் என்பவர் எனது தந்தை ஆவார், எனது தந்தை இதற்கு முன்னதாக வெளிநாட்டில் டெய்லராக வேலை பார்த்தார். தற்போது எனது தந்தை எங்களது வீட்டிலேயே டெய்லராக வேலை பார்த்துவருகிறார். இவ்வழக்கின் எதிரிகள் மூவரையும் தெரியும். எனக்காக வெளிநாட்டில் எனது தந்தை டெய்லராக வேலை பார்த்து சிறுக, சிறுக பணத்தினை சேமித்து வைத்திருந்தார். மேற்படி பணத்தினை ஏதேனும் நிறுவனத்தில் முதலீடு செய்து நான்கு ஆண்டுகளுக்கு பிறகு எனது திருமணத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்று நினைத்து இருந்தார்., அப்போது 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தினசரி செய்தி தாளில் உள்ளே துண்டு விளம்பர சீட்டு (பிட்நோட்டீஸ்) ஒன்று கண்டோம். மேற்படி விளம்பர சீட்டில் நாகப்பட்டினம் நடுவர் கீழவீதி நான்கு கால் மண்டபம் அருகே அமைந்துள்ள AF Tower ல் இயங்கி வரும் Prompt Multi state Co – Operative House Building Society Ltd., என்ற தனியார் நிறுவனத்தில் முதலீடு செய்தால் ஆண்டிற்கு 14 சதவீத வட்டி தருவதாகவும், 5 ஆண்டுகளில் முதலீடு செய்த பணத்திற்கு இரட்டிப்பு தொகை திருப்பி தருவதாகவும் விளம்பரம் கண்டிருந்தது. மேற்படி விளம்பர துண்டு சீட்டை பார்த்தபிறகு எனது பெற்றோர்கள் மேற்படி முகவரியில் உள்ள நிறுவனத்திற்கு சென்று பார்த்தார்கள்.

அச்சமயம் இவ்வழக்கின் எதிரிகளாகிய சேதுராமன், பாலமுருகன் மற்றும் உஷா ஆகியோர் மேற்படி முகவரியில் இருந்த அலுவலகத்தில் இருந்துள்ளார்கள். மேற்படி எதிரிகளின் உறவினரான ஜெயசுதா என்பவரும் மேற்படி அலுவலகத்தில் இருந்துள்ளார். அதனைதொடர்ந்து இவ்வழக்கின் எதிரிகள் மூவரும், மேற்படி நிறுவனத்திற்கு நாங்கள்தான் உரிமையாளர்கள் என்றும்எங்கள் நிறுவனத்தில் முதலீடு செய்தால் அதிக வட்டித்தொகை

கிடைக்கும் என்றும் உங்கள் பணத்திற்கு நாங்கள் பொறுப்பு என்றும் குறிப்பிட்டு நம்பிக்கை தந்துள்ளார்கள்.

அதனைபின்னிட்டு கடந்த மே 2016 மாத இறுதி வாரத்தில் வள்ளலார் கோயிலுக்கு எனது பெற்றோர்கள் சென்றிருந்தபோது எதிரிகள் மூவரும் மேற்படி கோயிலுக்கு வந்துள்ளார்கள்.. அப்போது எதிரிகள் மூவரும் எதன் காரணமாக நிறுவனத்தில் முதலீடு செய்யவில்லை என விசாரித்து மேற்படி அலுவலகத்தின் தலைமை அலுவலகத்தினை கோயம்புத்தூரில் நடத்தி வருவதாகவும், வடக்கு பொய்கைநல்லூரில் 40 ஆண்டுகளாக பூர்வீக வீட்டினில் குடியிருந்து வருவதாகவும், அதுமட்டுமல்லாது தனியே ஒரு கம்பூயூட்டர் சென்டரினை நடத்தி வருவதாகவும்., அவைகளை தவிர்த்து அசையா சொத்துகள் சொந்தமாக உள்ள காரணத்தினால் எங்களை நம்பி மேற்படி நிறுவனத்தில் முதலீடு செய்யுங்கள் என எதிரிகள் நம்பிக்கை வாக்குறுதிகளை கூறியுள்ளார்கள்.

மேற்படி எதிரிகள் மூவரும் அளித்திருந்த வாக்குறுதியின் பேரில் கடந்த சூன் 2016 முதல் டிசம்பர் 2016 மாதவரையும் எனது தந்தை சேமித்து வைத்திருந்த பணத்தினை பலத்தவணைகளாக எனது தாயாரின் பெயரில் ரூ.6,25,000/ மற்றும் எனது தந்தை பெயரில் ரூ.6,25,000/ ம் ஆக மொத்தம் ரூ12,50,000/ ம் நிரந்தர வைப்பீடாக மேற்படி நிறுவனத்தில் செலுத்தியுள்ளார்கள். மேற்படி நிரந்தர வைப்பீடானது 5 ஆண்டுகளுக்கு உரியதாகும்.

நிரந்தர வைப்பீடு தொகையிலிருந்து கிடைக்கக்கூடிய வட்டித்தொகைகளை Recurring Deposit மாதந்தோறும் வரவு வைத்துக்கொள்ள எதிரிகள் கேட்டுக்கொண்டதன்பேரில் எனது தந்தை பெயரிலும், எனது தாயார் பெயரிலும் கடந்த 2016 டிசம்பர் மாத வாக்கில் Recurring Deposit கணக்கினை துவக்கியுள்ளார்கள். மேற்படி Recurring Deposit கணக்கில் மாதந்தோறும் தலா 5,000/ வீதம் குறிப்பிட்ட காலம் வரையில் பாஸ் புத்தகத்தில் வரவு வைத்து கொடுத்துள்ளார்கள். அதனைபின்னிட்டு கணக்கு வழக்குகள் கனிணி மயமாக்கப்பட்டுவிட்டதால் அலுவலகத்திற்கு வந்து செல்ல தேவையில்லை என்றும் தானாகவே கணக்கில் பணம் சேர்ந்துவிடும் என எதிரிகள் கூறியுள்ளார்கள்.

நிரந்தர வைப்பீடு தொகை செலுத்தும் தினங்களில் அதற்கென நிரந்தர வைப்பீட்டு பத்திரத்தினை அப்போதே கொடுத்துள்ளார்கள். அதேபோல் Recurring Deposit கணக்கினை துவங்கியபோது , எனது பெற்றோர்கள் பெயரிலும் பாஸ்புத்தகம், ID Card. Share Certificate. SB Pass BooK ஆகியவைகளை எதிரிகள் கொடுத்துள்ளார்கள்.

கடந்த ஜனவரி 2021 மாதத்தில் என்னை திருமணம் செய்துகொள்ளலாம் என குறிப்பிட்டு வரன் தேடி வந்த காரணத்தினால் எனது பெற்றோர்கள் கடந்த செப்டம்பர் 2020 மாதவாக்கில் மேற்படி நாலுகால் மண்டபம் அருகே

அமைந்திருந்த எதிரிகளின் நிறுவனத்திற்கு சென்று பார்த்தபோது, எதிரிகள் மூவரும் இருந்த காரணத்தினால் எனது மகளுக்கு திருமணம் நடைபெறவுள்ள காரணத்தை கூறி நாங்கள் முதலீடு செய்த தொகையினை திரும்ப கேட்டுள்ளார்கள். அப்போது எதிரிகள் வைப்பீடு காலத்திற்கு முன்னதாகவே பணத்தினை திரும்ப கோருகின்ற காரணத்தினால் வட்டித்தொகைகள் கிடையாது என்றும் அசல் மட்டுமே திரும்ப தரப்படும் என்றும் இரண்டு நாட்கள் கழித்து முதலீடு செய்த அசல் தொகையை வந்து பெற்றுக்கொள்ளுமாறு எதிரிகள் மூவரும் தெரிவித்துள்ளார்கள்.

அவ்வாறு இருமுறை இரு நாட்கள் இடைவெளியில் எனது பெற்றோர்கள் சென்று பணத்தினை திரும்ப கேட்டுள்ளார்கள். மூன்றாவது முறை இருநாட்கள் இடைவெளியில் எனது பெற்றோர்கள் சென்று பார்த்தபோது மேற்படி அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. அதனைதொடரந்து எங்களுக்கு வழுங்கப்பட்டிருந்து பான்ட் பத்திரத்தில் கண்டிருந்த தலைமை இடமான கோயமுத்தூருக்கு எனது தந்தை சென்று பார்த்தபோது அத்தகைய விலாசகத்தில் எதிரிகளுடைய தலைமை நிறுவனம் நடந்து வந்திருக்கவில்லை என்ற விபரத்தை எனது தந்தை தெரிந்துகொண்டார் . திரும்பவும் நாகப்பட்டினம் வந்து மேற்படி அலுவலகத்திற்கு எனது பெற்றோர்கள் சென்று பார்த்தபோது தொடர்ந்து பூட்டப்பட்டிருந்த காரணத்தினால் எனது பெற்றோர்கள் அதிர்ச்சி அடைந்து எதிரிகளுடைய முகவரி அறிந்து, எனது தந்தை, நான் மற்றும் எனது தாயார் ஆகியோர் எதிரிகளிடம் பணத்தினை திருப்பி கேட்டோம். அப்போது எதிரிகள் மூவரும் பணத்தினை தயார் செய்துகொண்டிருப்பதாகவும் விரைவில் பணத்தினை திரும்ப கொடுத்துவிடுவதாக சொன்னார்கள். அதனை தொடர்ந்து பலமுறை எதிரிகளிடம் பணத்தினை கேட்டபோதும், ஒவவொரு முறையும் தருவதாக சொல்லி ஏமாற்றி வந்தார்கள், இறுதியாக ஒருநாள் எதிரிகள் மூவரும், கல்யாண வயதில் ஒரு பொண்ணு இருக்கு அதனால் ஒழுங்கு மரியாதையாக ஓடிவிடு இல்லையென்றால் குடும்பத்தோடு கொலை செய்துவிடுவதாக எங்களை மிரட்டினார்கள்.

அதனைதொடர்ந்து என்ன செய்வது என்று அறியாமல் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் கடந்த 30.11.2021 தேதியன்று எனது தந்தை புகார் மனுவினை அளித்திருந்தார்.

மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக போலிஸார் என்னை விசாரித்தபோது மேற்படி விபரங்களை தெரிவித்தேன்.

எதிரிகள் மூவரும் மனுவின்பேரில் ஆஜர் இல்லை. போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.